(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 1(4).]**

# பாராளுமன்றத்தின்
# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2025 ஜனவரி 06, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

## 2025 ஜனவரி 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

134/2024

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வுடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகள் காரணமாக மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கையை திருத்தி ஏதேனும் நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

148/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தின், பண்டாரகமவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள களுத்துறை மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி திறந்து வைக்கப்பட்ட திகதி யாது;

(ii) அவ் விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(iii) முறையாக பராமரிக்கப்படாமையின் காரணமாக மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி சேதமடைந்துள்ளது என்பதை அறிவாரா;

(iv) அவ் விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் உள்ள 400 மீட்டர் ஓட்டப்பாதையை உரிய தரத்திற்கமைய அமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(v) அவ் விளையாட்டுக் கட்டிடத் தொகுதியின் பாதுகாப்பு மதிலுக்கு வெளியிலுள்ள, அதற்குரித்தான காணியை வாகனங்களை நிறுத்துவதற்காக பொருத்தமான வகையில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ் விளையாட்டுக் கட்டிடத் தொகுதி தொடர்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் அறிவாரா;

(ii) அவ் விளையாட்டுக் கட்டிடத் தொகுதியிலுள்ள விளையாட்டு மைதானத்தை, கிரிக்கெட் விளையாட்டை விளையாடுவதற்கு உகந்ததாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

175/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது தொழிற்படுகின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய வர்த்தக நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) கடந்த 15 வருடங்களில் இந்த நிறுவனங்களினால் உருவாக்கப்பட்ட மொத்த இலாபம்/நட்டம் மற்றும் முதலீட்டின் மீதான வருமானம் யாதென்பதையும்;

(iii) இந்த நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தது முதல் இற்றை வரையில் அடைந்த மொத்தத் திரட்டிய அல்லது சிறிது சிறிதாகச் சேர்ந்த இலாபம்/நட்டம் யாதென்பதையும்;

(iv) குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் இந்நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட மூலதனம் மற்றும் கடன்களின் பெறுமதி யாதென்பதையும்?

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

240/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சில பிரதான அரச வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணர்களுக்காக End Post எனும் பெயரில் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளதை அறிவாரா;

(ii) அப்பதவிகள் உருவாக்கப்படுவதன் விஞ்ஞான ரீதியான அடிப்படை யாது;

(iii) இன்றேல், சில உத்தியோகத்தர்களின் விருப்பத்திற்கமைய விரும்பிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் மேற்படி பதவிகள் உருவாக்கப்படுகின்றனவா;

(iv) அதற்காக முறையான, வெளிப்படைத்தன்மை மிக்க மற்றும் தனிநபர் விருப்பங்களுக்கமைய கையாள முடியாத முறைமையொன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(v) ஆமெனில், அக்காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

244/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவை பிரதேச செயலகப் பிரிவுக்காக நகர அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திட்டம் யாதென்பதையும்;

(iii) அத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

253/2024

கௌரவ ரவீந்திர பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹப்புத்தளை மற்றும் ஹல்தமுல்லை பிதேச செயலகப் பிரிவுகளில் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காணி அளவு ஒவ்வோர் கிராம அலுவலர் பிரிவின் பிரகாரம் ஹெக்டயார் அளவில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காணிகளில் இரண்டாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வொவ்வோர் இரண்டாம் தரப்பினரதும் பெயர், அத்தரப்பினருக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ள இடம் மற்றும் வழங்கப்பட்டுள்ள அடிப்படை என்பவை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமற்ற அரச காணிகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அளவுகள் ஹெக்டயார்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில் இதுவரையில் இனங்காணப்பட்டுள்ள விவசாயக் காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(iii) அக்காணிகளுள் இன்றளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

259/2024

கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர,— கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ பங்கேற்றுள்ள உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயமும் மேற்கொள்ளப்பட்டுள்ள நாடு, நோக்கம், இலங்கைக்கு கிடைத்த நன்மைகள், முன்னாள் ஜனாதிபதிக்கு மேலதிகமாக அரசாங்க செலவில் பங்கேற்றுள்ள நபர்கள் மற்றும் அவர்களை இணைத்துக் கொண்டதன் நோக்கம் ஆகியன வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு விஜயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த செலவு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

316/2024

கௌரவ தேவானந்த சுரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மனுதாரர் திரு. முதுதந்திரிகே நிலங்க தில்சான் குறே மற்றும் இதர நான்கு மனுதாரர்களால் சுகாதார அமைச்சுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த SCFR 55/2019 ஆம் இலக்கமுடைய 2019 பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதிய வழக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் முன்னிலையில் மத்தியஸ்தம் செய்யப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மத்தியஸ்தத்தின்படி, 01 ஆம் மனுதாரர் ஆயுர்வேத கல்விசார் கற்கைநெறியைத் தொடர்வதற்கு 2019 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(iii) இலக்கம் 2 தொடக்கம் 5 வரையான மனுதாரர்கள் அவர்களது பரீட்சைகளை நடாத்தி முடித்துள்ளனரா என்பதையும்;

(iv) ஆயுர்வேத கல்விசார் கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு ஆயுர்வேத திணைக்களத்தால் இன்றளவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

318/2024

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொ/நி/சு 03/2016 இன் சம்பள அளவுத் திட்டம் 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியமானது அதற்கேற்ப திருத்தப்பட்டது என்பதையும்;

(ii) 2019.11.11 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 35/2019 ஆம் இலக்க பொ/நி/சுற்றறிக்கை வெளியிடப்பட்டது என்பதையும்;

(iii) 2020.01.02 ஆம் திகதி அதனைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) இதன் காரணமாக 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரை ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஓய்வூதியதாரர்களுக்கு 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் கிடைக்க வேண்டிய ஓய்வூதியம் கிடைக்காததால் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2020.01.02 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை இரத்துச் செய்து 2019.11.11 ஆம் திகதிய தீர்மானத்தை பயனுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் கிடைக்க வேண்டிய ஓய்வூதியத்தை 2025 ஆம் ஆண்டிலிருந்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட வேண்டிய நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி (அ)(iv) இன் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) இவர்களில் மரணமடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

321/2024

கௌரவ அஜித் கிஹான்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த காலத்தில், வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான காணிகளில் மணல் அகழப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மணல் விற்பனையின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) சுற்றாடல் ரீதியாக பாதகமான இச்செயற்பாடு தொடர்பில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனியின் தென்னந்தோட்டங்களிலிருந்து ஈட்டப்படுகின்ற வருடாந்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கம்பனிக்குச் சொந்தமான தென்னந்தோட்டங்களை இந்தியாவின் அமுல் கம்பனிக்கு வழங்குவதற்கு கடந்த அரசாங்கங்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை அறிவாரா என்பதையும்;

(iii) அதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iv) மேற்படி கம்பனியின் தென்னந்தோட்டங்களில் விளைச்சல் குறைவடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி தென்னந்தோட்டங்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2025 ஜனவரி 21, செவ்வாய்க்கிழமை)**

283/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்கள்/இடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்கள்/இடங்களில் குடியிருப்புகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மக்கள் வசிக்கும் ஆபத்தான குடியிருப்புகள் மற்றும் அசையா சொத்துக்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள மாற்றுத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

284/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக கேகாலை மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்கள்/இடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்கள்/இடங்களில் குடியிருப்புகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போதும் மக்கள் வசிக்கும் ஆபத்தான குடியிருப்புகள் மற்றும் அசையா சொத்துக்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள மாற்றுத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

285/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக பதுளை மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்கள்/இடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்கள்/இடங்களில் குடியிருப்புகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மக்கள் வசிக்கும் ஆபத்தான குடியிருப்புகள் மற்றும் அசையா சொத்துக்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள மாற்றுத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

286/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக மாத்தளை மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்கள்/இடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்கள்/இடங்களில் குடியிருப்புகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மக்கள் வசிக்கும் ஆபத்தான குடியிருப்புகள் மற்றும் அசையா சொத்துக்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள மாற்றுத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

287/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக கண்டி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்கள்/இடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்கள்/இடங்களில் குடியிருப்புகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மக்கள் வசிக்கும் ஆபத்தான குடியிருப்புகள் மற்றும் அசையா சொத்துக்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள மாற்றுத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

288/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலிய மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்கள்/இடங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்கள்/இடங்களில் குடியிருப்புகள் மற்றும் பொதுச் சொத்துக்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மக்கள் வசிக்கும் ஆபத்தான குடியிருப்புகள் மற்றும் அசையா சொத்துக்கள் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மற்றும் கிராம அலுவலர் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள மாற்றுத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜனவரி 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5/2024

கௌரவ ஹேஷா விதானகே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லுணுகம்வெஹெர தேசிய பூங்காவில் காட்டு யானைகள் தடுப்பு நிலையமொன்றை அமைப்பதற்கான கருத்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இதுவரை அக்கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்திற்கான நிதியளிப்பு எம்மூலங்களிலிருந்து பெறப்பட்டது என்பதையும்;

(iv) இன்றளவில் அக்கருத்திட்டம் வெற்றியளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

61/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஸ்ரீலங்கன் விமான சேவை ஈட்டிய இலாபம்/ நட்டம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் ஸ்ரீலங்கன் விமான சேவை இலாபம்/ நட்டமடைந்தமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) ஸ்ரீலங்கன் விமான சேவையை நட்டமின்றி இயங்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

68/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் மட்டக்களப்பு, மண்முனை - மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வவுணதீவு பிரதேசத்தில் 50இற்கும் மேற்பட்ட வீடுகளைக் கொண்ட வீட்டுத் திட்டமொன்று நிர்மாணிக்கப்பட்டதென்பதையும்;

(ii) அவ்வீட்டுத்தொகுதியிலுள்ள சில வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும், மேலும் சில வீடுகளின் நிர்மாணப் பணிகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை என்பதையும்;

(iii) அதன்பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அவ்வீடுகளைப் புனரமைத்து மக்களிடம் கையளிக்கவில்லை என்பதையும்;

(iv) அதன் காரணமாக 8 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி வீட்டுத்திட்டத்தை முழுமையாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) எக்காலப்பகுதியில் அவ்வீட்டுத்திட்டம் முழுமையாக நிறைவு செய்யப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

81/2024

கௌரவ ரோஹன பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு தாபிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழு தாபிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகள் தற்போது பல்வேறு ஆட்கள்/நிறுவனங்களினால் மோசடியான முறையில் கைப்பற்றப்பட்டுள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ் ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை பாதுகாத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

89/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள ஆறுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆறுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஆறுகளில் பெரும்பாலானவை மாசடைந்துள்ளன என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆறுகளை சுத்தம் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) ஆறுகள் மாசடைவதை குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

319/2024

கௌரவ இம்ரான் மகரூப்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023.01.01 திகதி தொடக்கம் 2024.12.20 திகதி வரையான காலப்பகுதியில் கிண்ணியா மின் பாவனையாளர் சேவை நிலைய ஆளுகைப் பிரதேசத்தில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேசத்திற்கமைவாக வெவேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் துண்டிப்புக் காரணமாக இணையத்தளம் ஊடாகக் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்வோர் உள்ளிட்ட அப்பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டமையை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) தொடர்ச்சியாக இவ்வாளுகைப் பிரதேசத்தில் மின் விநியோகம் துண்டிக்கப்படுகிறது என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அச்சிடப்பட்ட மின்கட்டணப் பட்டியலுக்குப் பதிலாக குறுஞ்செய்தி ஊடாக மாதாந்த மின்கட்டணப் பட்டியலை வழங்கும் முறையொன்று நடைமுறையில் உள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக சூட்டிகை (ஸ்மார்ட்) கைத்தொலைபேசிகளை கொண்டிராதோர் மாத்திரமன்றி வயோதிப மின் பாவனையாளர்களும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்குப் பதிலாக முன்னர் போன்றே அச்சிடப்பட்ட கட்டணப் பட்டியலை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

320/2024

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவானது, 1989 இல் உப மாவட்ட செயலகப் பிரிவாக தாபிக்கப்பட்டதன் பின்னர் 1993.03.17ஆம் திகதிய 93/600/034 ஆம் இலக்க மற்றும் 1993.03.03 ஆம் திகதிய 93/600/034(I) ஆம் இலக்க அமைச்சரவை நிருபங்கள் மற்றும் 1993.07.09ஆம் திகதிய அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 1993.09.28 ஆம் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஒரு பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது என்பதையும்;

(ii) அதற்கமைய, 34 வருடங்களுக்கும் மேலாக அது ஒரு சுயாதீனமான பிரதேச செயலகமாக இயங்கி வருகின்றதென்பதையும்;

(iii) கல்முனை - வடக்கு (தமிழ்ப் பிரிவு) பிரதேச செயலகத்தை, கல்முனை -தெற்கு பிரதேச செயலகத்தின் ஓர் உப அலுவலகமாகத் தரமிறக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ)(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தரமிறக்குவதற்கு அமைச்சரவை தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், இத்தகைய தரமிறக்கத்தின் அடிப்படை யாதென்பதையும்;

(iv) அமைச்சரவைத் தீர்மானத்தை விஞ்சி, பிரதேச செயலகமொன்றை, உப பிரதேச செயலகமொன்றாகத் தரமிறக்குவதற்கு ஓர் அமைச்சின் செயலாளருக்கு / அரச அலுவலரொருவருக்கு இயலுமையுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதன் சட்டபூர்வத்தன்மை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

323/2024

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பொலிஸில், பொலிஸ் குதிரைப்படைப் பிரிவொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், தற்பொழுது அப்பிரிவிலுள்ள குதிரைகளின் எண்ணிக்கை எத்தனை;

(iii) மேற்படி எண்ணிக்கையானது வயதுப் பிரிவுகளின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலிஸ் குதிரைப்படைப் பிரிவிற்கு 15 இனவிருத்திக்குரிய ஆண் குதிரைகளை இறக்குமதி செய்வதற்காக LA/SJ/300/2024 என்ற இலக்கத்தின் கீழ் விலைமனு கோரப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) மேற்குறித்த குதிரைகளை இறக்குமதி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் யார்;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுவிற்கமைய மேற்குறித்த 15 குதிரைகளை இறக்குமதி செய்வதற்காக செலவு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

324/2024

கௌரவ லால் பிரேமநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தேயிலைக்கு செஸ்வரி அறிவிடப்படுவதனை அறிவாரா;

(ii) தற்பொழுது ஒரு கிலோகிராம் தேயிலைக்காக அறவிடப்படுகின்ற செஸ்வரி எவ்வளவு;

(iii) 2024 ஆம் ஆண்டில் மேற்படி செஸ்வரி மூலமாக ஈட்டப்பட்ட வருமானம் எவ்வளவு;

(iv) மேற்படி வருமானத்திலிருந்து, இலங்கை தேயிலைச் சபை, சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையம் ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் மேற்படி பணத்தொகையை செலவு செய்துள்ள விதம் தொடர்பிலான அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

327/2024

கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு வசமிருந்த கடுவலை, கொத்தலாவல கிராம அலுவலகர் பிரிவில் 'பட்டுத் தொழிற்சாலை' அமைந்திருந்த காணியிலிருந்து வ/ப தர்மாயதன பாதுகாப்புச் சபைக்கும் ஏனைய தரப்பினருக்கும் காணித் துண்டுகள் விடுவிக்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விடுவிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் தவிர்த்த எஞ்சியுள்ள காணியிலிருந்து குடியிருப்புகளை அமைப்பதற்காக கையுதிர்க்கப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) வீதிகள் மற்றும் ஒதுக்குப் பிரதேசங்கள் நிமித்தம் ஒதுக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பொதுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அத்தகைய ஒவ்வொரு காணித் துண்டினதும் விஸ்தீரணமானது, நில அளவீட்டு அலகுகளுக்கு ஏற்ப தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் கையுதிர்க்கப்பட்ட அடிப்படை மற்றும் காலகட்டம் யாதென்பதையும்;

(ii) அச்சந்தர்ப்பத்தில் பர்ச் ஒன்றின் பெறுமதியும் தற்போதைய பர்ச் ஒன்றின் பெறுமதியும் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேலே (ஆ)(ii)இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகள் அடையாளமிடப் பட்டுள்ள காணி வரைபடத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) பொதுப் பணிகளுக்கான காணித் துண்டுகள் இன்றளவில் எத்தகைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2025 ஜனவரி 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

103/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ஆந் திகதி முதல் நவம்பர் மாதம் 30 ஆந் திகதி வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் லீற்றர்களின் அளவு மற்றும் மசகெண்ணெய் பீப்பாய்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வகையைச் சார்ந்த எரிபொருள் லீற்றருக்கும் அரசாங்கம் விதித்துள்ள வரித் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வகையைச் சார்ந்த எரிபொருளிலுமிருந்து அரசாங்கம் அறவிட்டுள்ள மொத்த வரித் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி எரிபொருள் வகைகளுக்காக செலுத்தப்பட்டுள்ள தரையிறக்கும் கட்டணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

111/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஏற்றுமதி செயலாக்க வலயமொன்றில் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மிகவும் முக்கியமானது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை யாதென்பதையும்;

(iii) பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மென்மேலும் அபிவிருத்தி செய்வது உட்பட, மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தினை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

149/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை நகரம், மில்லனிய, வாத்துவ, மொரொன்துடுவ போன்ற அதிக சனத்தொகை கொண்ட மற்றும் பல்வேறு கைத்தொழில்கள் முன்னெடுக்கப்படுகின்ற அத்துடன் சுற்றுலாத் தொழிற்றுறைக்கு மிகவும் முக்கியமான ஒரு பிரதேசத்திற்கு, தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கான பிரவேசத்தை வழங்கும் “பெல்பொல இடமாறலானது” தேசிய ரீதியில் முக்கியமானதொரு கருத்திட்டம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக இலங்கை முதலீட்டு சபையால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்காக இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்திற்கான காணிகளை கைக்கொள்வதற்கு செலவிடப் பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி கருத்திட்டத்தை நிறைவுசெய்வதற்கு தேவைப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(vii) மேற்படி கருத்திட்டத்தை நிறைவுசெய்ய எதிர்பார்க்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

(viii) களனிகம இடமாறல் தொடக்கம் தொடங்கொட இடமாறல் வரையிலுள்ள தூரம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

176/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வங்கி கூட்டிணைக்கப்பட்ட திகதியினையும்;

(ii) இலங்கை வங்கியின் தற்போதைய தலைவரினதும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களினதும் பிரதம நிறைவேற்று அதிகாரியினதும் பெயர்களையும்;

(iii) கிளைகள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையினையும்;

(iv) இன்றுள்ளவாறாக, இலங்கை வங்கி அதன் பங்குடைமையாளர்களிடம் இருந்து அவர்களுக்குச் சொந்தமான பங்குகளுக்காக அவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட பணத் தொகை யாதென்பதையும்;

(v) இது மூலதனப் போதுநிலைக்கான "பேசல்" (BASEL) தேவைப்பாடுகளுடன் இயைபுறுகின்றதா என்பதையும்;

(vi) இயைபுறாவிடின், அதை நிவர்த்திப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 10 வருடங்களுக்கான இலாபம் மற்றும் அடுத்த 3 வருடங்களுக்காக எதிர்பார்க்கப்படும் இலாபம் என்ன என்பதையும்;

(ii) மேலே (i) இன் பிரகாரம், கடந்த 10 வருடங்களில் முதலீட்டின் மீதான இலாபம் என்ன என்பதையும்;

(iii) கடந்த 5 வருடங்களில் நிர்வாகச் செலவு மற்றும் கடன் வழங்கல் வரம்பு வீதம் எவை என்பதையும்;

(iv) கடன் வழங்கல் வீதத்தின் சதவீதமாக நிர்வாகச் செலவு என்ன என்பதையும்;

(v) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஐந்தொகைப் பெறுமதிகள் என்ன என்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(இ) (i) 1 பில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்கள் பதிவழிக்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அதோடு தொடர்புபட்ட நிறுவனங்களின் பெயர்கள் என்ன என்பதைம்;

(iii) பதிவழிப்பதற்காக ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட சட்ட நடவடிக்கைமுறைகள் எவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

241/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "குடும்ப மருத்துவம்" (Family Medicine) எனும் பெயரில் நிபுணத்துவ பயிற்சித் துறையொன்றைத் தாபிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது யாதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி எதிர்ப்பார்ப்பினைப் பூர்த்தி செய்யும் வகையில், அதாவது பொது மக்களுக்கும் ஆரம்ப நிலை மருத்துவச் சேவைக்கும் அண்மித்து செயலாற்றும் வகையில், குறித்த நிபுணத்துவ மருத்துவர்கள் சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) இன்றேல், சிற்சில தனிப்பட்ட தேவைகளின் நிமித்தம் நகர்புறங்களை அண்மித்த மருத்துவமனைகளுக்கு சேவை இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

250/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019 முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையில் கோவிட்-19 நோயுடன் தொடர்புடையதாக —

(i) ஆய்வுகூடத்தினால்-உறுதி செய்யப்பட்ட நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை;

(ii) உறுதி செய்யப்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) மரணித்தவர்களின் வயது, பால், வதிவிட மாகாணம் மற்றும் மாவட்டம், இனம் மற்றும் சமயம் அடிப்படையிலான மரணங்களின் எண்ணிக்கை விபரங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(ஆ) 2019 முதல் 2022ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையில் கோவிட்-19 மரணங்களுடன் தொடர்புடையதாக —

(i) சடலங்களை அகற்றுவதற்கு பயன்படுத்தப்பட்ட முறை/கள்;

(ii) தகனக்கிரியை மேற்கொள்ளப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை;

(iii) அடக்கம் செய்யப்பட்ட சடலங்களின் மொத்த எண்ணிக்கை;

(iv) தகனக்கிரியை மற்றும் அடக்கம் செய்யப்பட்டவர்களின் வயது, பால், வதிவிட மாகாணம் மற்றும் மாவட்டம், இனம் மற்றும் சமயம் அடிப்படையிலான விபரங்கள்;

ஆகியவற்றை அவர் இச்சபைக்கு வெவ்வேறாக தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

254/2024

கௌரவ ரவீந்திர பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கல்வி மறுசீரமைப்பு முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) அவற்றில் முன்மொழியப்பட்டவாறு அழகியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்கியல் ஆகிய பாடங்கள் நீக்கப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் நடைமுறையிலுள்ள கல்வி முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கின்றீர்களா என்பதையும்;

(iv) புதிய கல்வி முன்மொழிவுகளால் மாணவர்கள் எதிர்நோக்கும் அழுத்தங்களை குறைக்கும் முறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அனைத்து அரச பாடசாலைகளுக்கும் சமமாக வளங்களை பகிர்ந்தளிப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) கல்வித் துறையில் நிலவும் கடும் போட்டித்தன்மையைக் குறைப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) பல்கலைக்கழக கல்விசார் வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக வகுக்கப்படும் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

260/2024

கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக செலவுகள் தொடர்பில் இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கை அடையவில்லையென 2024.11.23 ஆந் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை அலுவலகத்தின் பிரதானி திரு.பீட்டர் புரூவர் தெரிவித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அஸ்வெசும, மூத்த பிரஜைகள், நாட்பட்ட நோய்களுக்கு ஆளாகியுள்ளவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த நிதித்தொகை யாதென்பதையும்;

(iii) 2024.11.23 ஆந் திகதியளவில் மேற்படி பணத்தொகையில் செலவு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) இதன் சதவீதம் யாதென்பதையும்;

(v) சர்வதேச நாணய நிதியம் சமூக செலவுகளுக்காக (Social Spending) வழங்கும் இலக்கின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் சமூக செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(vi) இதற்கு போதியளவு நிதியை ஒதுக்கீடு செய்யாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

295/2024

கௌரவ சாமர சம்பத் தசநாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பத்தாவது பாராளுமன்றத்தில் அரசாங்க கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வாகனங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி வாகனங்கள் சனாதிபதி அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், அவற்றை வழங்கிய நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி வாகனங்களில் கடமையாற்ற அரசாங்க சாரதிகள் பணியமர்த்தப் பட்டுள்ளனரா என்பதையும்;

(vi) மேற்படி வாகனங்களுக்கான எரிபொருள், பராமரிப்புச் செலவுகள் மற்றும் காலமுறை சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி வாகனங்களுக்காக மாதாந்தம் செலவிடப்படும் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

317/2024

கௌரவ தேவானந்த சுரவீர,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு – 11, ஓல்கொட் மாவத்தையில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த சில வர்த்தகர்களை தத்தமது வர்த்தக நிலையங்களிலிருந்து அகற்றி “மிதக்கும் சந்தை'' வளாகத்தில் இவர்களுக்கு வர்த்தக நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) போதிய வியாபாரம் இன்மையால் மேற்படி வர்த்தக நிலையங்கள் இன்றளவில் தோல்வியைச் சந்தித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அதனால், மேற்படி வர்த்தகர்கள் தாங்கள் ஏற்கெனவே வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுத்த இடங்களை மீளக் கோருவதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், ஏற்கெனவே வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுத்த இடங்களை இவர்களுக்கு வழங்குவதற்கான சாத்தியம் காணப்படுகின்றதா என்பதையும்;

(v) “மிதக்கும் சந்தை”யை விருத்திசெய்வதற்காக இன்றளவில் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யான்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஜனவரி 24, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

06/2024

கௌரவ ஹேஷா விதானகே,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் மாவனெல்லை பிரதேசத்தில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் பதிவாகிய திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி சம்பவத்திற்காக கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்தை விசாரணை செய்த பாதுகாப்பு அலுவலர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோது அந்தப் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அழுத்தம் பிரயோகித்த அப்போதைய ஆளுநர்கள் மற்றும் அரசாங்கத்தில் பலம்வாய்ந்த நபர்களின் பெயர்கள் தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

62/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 ஆம் திகதியிலிருந்து இதுவரை சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை மாத வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வழங்குவற்கு அறவிடப்படும் கட்டணம் யாதென்பதையும்;

(iii) சாதாரண சேவையின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு துரிதமாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

70/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1982 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் – பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட களுவன்கேணி – 2 பிரதேசத்தில் சீனோர் வீடமைப்புத் திட்டம் என்ற பெயரில் வீடமைப்புத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதை அறிவாரா;

(ii) மேற்படி வீடுகள்/காணிகளுக்கான உரித்து உறுதிகள் இதுவரை வழங்கப்படாததால், அவற்றில் வசிப்பவர்கள் அந்த வீடுகள்/காணிகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதையும் அறிவாரா;

(iii) ஆமெனில், அந்த வீடுகள்/காணிகளுக்கு உரித்து உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) எக்காலப்பகுதியில் அந்த உறுதிகள் வழங்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

82/2024

கௌரவ ரோஹண பண்டார,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் வசமுள்ள விமானங்களின் எண்ணிகை யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனம் எவ்வெவ் விமானச்சேரிடங்களுக்கு சேவையை வழங்குகிறது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தை மேலும் வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

90/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அரிசி எந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி அரிசியை இறக்குமதி செய்த நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) அரிசி இறக்குமதியைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

105/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையின் வினாத்தாள்கள் அல்லது வினாத்தாள்களில் உள்ளடங்கியுள்ள வினாக்கள், மேற்படி பரீட்சை நடைபெற்ற திகதிக்கு முன்னர் வெளித்தரப்பினருக்கு கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

112/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வலயத்திற்காக இன்றளவில் கிடைத்துள்ள முதலீடுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெறுமதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளால் இன்றளவில் உருவாக்கப்பட்டுள்ள நேரடியான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி ஏற்றுமதி வலயத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

245/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவை பிரதேச செயலகப் பிரிவில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான உத்தேச கருத்திட்டங்களில் இதுவரை செயற்படுத்தப்படாது எஞ்சியுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கருத்திட்டமும் செயற்படுத்தப்படும் காலப்பகுதி, நிதிவசதி பெறப்படும் விதம் மற்றும் செயற்படுத்தும் நிறுவனம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

296/2024

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபை பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு அரச ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ள கால எல்லையை மீண்டும் நீடிக்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கால எல்லை நீடிக்கப்படாததால், தேசிய பாடசாலைகளில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்கள் எவ்வாறு சமநிலைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

322/2024

கௌரவ அஜித் கிஹான்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திலுள்ள அதிகமானனோர் இத்தாலியில் தொழில் புரிவதோடு அவர்களது சாரதி அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ள இயலாதுள்ளமை முக்கியமானதொரு பிரச்சினையாக மாறியுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பணியாளர்கள் மனிதாபிமானமற்ற சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்பதை அறிவாரா;

(iv) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(v) வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக உறுதியளித்து பணமோசடி செய்கின்ற நிறுவனங்கள்/நபர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

(vi) மோசடி செய்துள்ள பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?